සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
**சமூக வலுவூட்டல் அமைச்சு**
**MINISTRY OF SOCIAL EMPOWERMENT**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல**<br>My No **DSD/HO/05/MF/01/**சுற்றுநிருபம் | ඔබේ අංකය<br>**உமது இல**<br>Your No ........................ | දිනය<br>**திகதி**<br>Date 2018.07.26 |

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் :- 2018/10**

சகல சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

**<u>சமுர்த்தி பயனுகரிகளின் முயற்சியாண்மைத் திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன்தேவைகளை அடையாளம் காணல் "சமுர்த்தி தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத்திட்டம்"</u>**

## 01. அறிமுகம் :-

சமுர்த்தி வங்கி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை சமுர்த்தி குறுநிதி திட்டத்தினூடாக பல கடன்களை பெற்றுள்ள வங்கி அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் உற்பத்தியாளர்களாக / முயற்சியாளர்களாக உருவாகியுள்ளனர்.

சிறியளவில் ஆரம்பிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் இன்று பிரதேச மற்றும் தேசிய சந்தைகளுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதுடன் பாரிய தொழில்வாய்ப்புக்களையும் உருவாக்கியுள்ளது. அவ்வாறானவர்களின் முதலீட்டு திறன்களை மதிப்பீடு செய்து அவர்களுக்கான விசேட கடன் வேலைத்திட்டங்களை மேலும் செயற்படுத்துதல் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

எனவே இதன் முக்கியத்துவத்தை கவனத்தில்கொண்டு முதலீட்டு திறன்களை மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் நடுத்தர அளவிலான கடன்தேவைகளை அறிந்து கொள்வதற்குமான ஒரு ஆய்வு முறைமை இதன் மூலம் முன்வைக்கப்படுகின்றது.

இவ் ஆய்வுமுறைமையின் மூலம் சமுர்த்தி பயனுகரிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் குறிப்பிட்ட காலத்தினுள் பல்வேறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினால் பெற்றுக்கொண்டுள்ள தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளது அம்மதிப்பீட்டின் பிரகாரம் அவர்களை மேலும் பலமிக்க தொழில்முயற்சியாளராக ஆக்குவதே இச் செயற்பாட்டின் குறிக்கோளாகும்.

**1?? ????? ,4 ?? ???  , ???????????, ?????????? . /1?? ?????? , 4 ??? ????  ,??????????? ?????????  /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramul**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍ය-ක්ෂ ජනරාල්<br>**பணிப்பாளர் தலைமையதிபதி**<br>Director General | අධ්‍යක්ෂ(පාලන හා ආයතන)<br>**பணிப்பாளர்** ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>**பிரதான கணக்காளர்**<br>Chief Accountant | අධ්‍යක්ෂ(ක්ෂුද්‍ර මූල්‍ය )<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>**அலுவலகம்**<br>Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 28877** |
| | | **Hot Line :0112-889007** | | | |

**02 வேலைத்திட்டத்தின் நோக்கம்-**

- நீண்டகாலமாக சமுர்த்தி வங்கி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ள சமுர்த்தி பயனுகரிகள் மற்றும் பயனுகரியல்லாத குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சியாண்மைத் திறமைகளை மதிப்பீடு செய்தல்
- இம்மதிப்பீட்டின் மூலம் தமது தொழில் முயற்சியினை மேலும் விருத்தியடையச் செய்வதற்கு சமுர்த்தி வேலைத்திட்டத்தின் மூலம் தேவையான உதவிகளை வழங்குதல்.
- கிராமியப் பிரதேசங்களில் காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் திறமைகளை மேலும் விருத்தியடையச் செய்தல்
- சமுர்த்தி வங்கிவலையமைப்பினுள் காணப்படும் பொருளாதார பலத்தினை கிராமிய / நகரப்புற பொருளாதார அபிவிருத்திக்கு வினைத்திறன் மிக்கவகையில் இணைப்புச் செய்தல்.
- கிராமிய / நகரப்புற தொழில்வாய்ப்பு விருத்திக்கு ஏற்றவிதத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.

**2.1 செயற்படுத்தும் முறைமை**

இவ்வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக தற்போது சமுர்த்தி வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் நம்பிக்கைக்குரிய சிறுதொழில் முயற்சியாளர்களை அடையாளம் காணும்பொருட்டு இலகுவான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளல். இது பிரிவுச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இவ் ஆய்வின் மூலம் வினைத்திறன் கூடிய தொழில் முயற்சியாளர்களை அடையாளம் காணல். இதனை மிக வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளும் பொருட்டு அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை உள்ளடக்கிய குழுவொன்று சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு உதவியாக நியமிக்கப்படும். முதற்கட்ட ஆய்வின் மூலம் இதுவரை சமுர்த்தி வங்கியில்இருந்து பெற்றுக்கொண்ட கருத்திட்ட கடன்கள் மற்றும் அவர்களின் தொழில்முயற்சியாண்மைத் திறன்கள் என்பன மதிப்பீடு செய்யப்படவுள்ளது. அடுத்தகட்டமாக ஆய்வில் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் பிரகாரம் சமுர்த்தி வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் முதலீட்டுக்கான திறமைகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளது..

**03. தொழில் முயற்சியாளர்களை அடையாளம் காண்பதற்கான ஆய்வு**

**3.1** இத்துடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இலகுவான படிவத்தினை (இணைப்பு-01) சமுர்த்தி வங்கிக்கடன் வாடிக்கையாளரின் பொருட்டு பூரணப்படுத்த வேண்டும். இது மிக இலகுவான ஆய்வாகும் உரிய விடயத்தின் பொருட்டு பொருத்தமான அடையாளத்தை இட்டுக்கொள்ளல் வேண்டும். அதாவது உரிய தகவல்கள் சரியானது (ஏற்றுக்கொள்ளக்கூடியது) எனின் **(✓)** அடையாளத்தினையும், பிழை எனில் அல்லது பொருத்தமில்லை எனின் **(x)** அடையாளத்தினையும் இடுதல் வேண்டும். இவ்வாறு அடையாளமிடும் போது உரிய விடயங்கள் தொடர்பாக பயனுகரிகள் அல்லது வங்கி வாடிக்கையாளர்களுக்கு நன்கு தெளிவுபடுத்த வேண்டியதுடன் அது தொடர்பாக அவர்களின் சம்மததினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இங்கு **(✓)** அடையாளத்தின் எண்ணிக்கை அளவிற்கு ஏற்ப அவர்களின் தொழில் முயற்சியாண்மை திறன்கள் நூற்றுவீதத்தில் கணிப்பீடு செய்யப்படும். இவ் ஆய்வின் முதற் குழுவினரை (முதலாம் கட்டம்) அடையாளம் காணும் போது தற்போது வெற்றிகரமான முறையில் சிறியளவிலான வியாபாரம் / கைத்தொழில் / பயிர்ச்செய்கை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்களை சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழியப்படுகின்றது. எனவே இவ் ஆய்வு எந்தவகையிலும் அனைத்து சமுர்த்தி பயனுகரிகளுக்கும் மேற்கொள்ளப்படவேண்டிய அவசியமில்லை. அதாவது தற்போது வெற்றிகரமான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள வங்கி வாடிக்கையாளர்களை மேலும் பலப்படுத்துவதற்கு தேவையான விடயங்களை கண்டறிவதற்காகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**3.2** இவ் ஆய்வு கீழ் குறிப்பிடும் விதத்தில் இரு கட்டங்களாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**முதற்கட்டம்**

தற்போது சமுர்த்தி வங்கிக்கடன் திட்டத்தின் கீழ் வருமானமீட்டும் கருத்திட்டத்துக்கு கடன் வசதியினைப் பெற்று உரியமுறையில் மீளச்செலுத்திக் கொண்டிருக்கும் அல்லது பல கடன்களைப் பெற்று உரியமுறையில் செலுத்தி முடித்துள்ளதுடன் புதிய கடன் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள தொழில் முயற்சியாளர்களிலிருந்து கீழ் குறிப்பிடப்படும் நியதிகள் அனைத்தையம் உள்வாங்கிய நிலையில் மிக வெற்றிகரமான விதத்தில் செயற்படும் தொழில் முயற்சியாளர்களை கிராமசேவகர் பிரிவுமட்டத்தில் தெரிவுசெய்தல் முதற்கட்ட ஆய்வின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

I. வங்கியின் அங்கத்துவத்தினை பெற்று 03 வருடங்களை தாண்டியிருத்தல் வேண்டும்.

II. சமுர்த்தி வங்கிக் கடன் கலாசாரத்திற்கு அமைய வருமானமீட்டும் கருத்திட்டத்தின் பொருட்டு கடன்களைப் பெற்ற வெற்றிகரமான தொழில்முயற்சியாளராகவுள்ள வங்கி அங்கத்தவராக இருத்தல்

III. வங்கியுடன் சிறந்த முறையில் சேமிப்பு மற்றம் கடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வாடிக்கையாளராக இருத்தல்.

**இரண்டாம் கட்டம்-**

முதலாம் கட்டத்தின் கீழ் ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் குறித்த ஆய்வுப்படிவம் மற்றும் முறைமைகளை பாவித்து தகுதியுடைய தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்து அவர்களின் முதலீட்டு திறமைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் அவர்களின் எதிர்கால மூலதன மற்றும் முகாமைத்துவ தேவைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கான தொடரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**04 ஆய்வுக்குழு-**

சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் கீழ்வரும் உத்தியோகத்தர்களை கொண்ட குழு ஒன்றின் மூலம் தகவல்கள் சேகரித்தல் மற்றும் முதலீட்டு திறன்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

1. பிரிவுச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
2. கிராம சேவகர் / பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர் ( பிரிவில் கட்டுப்பாட்டு சபை உறுப்பினர் இல்லாதவிடத்து அந்தப்பிரிவின் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் ஒருவர்)
4. சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் / செயலாளர்

இவ் உத்தியோகத்தர்களை உரிய குழுவுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளருக்கு வழங்கப்படுகின்றது.

**05. ஆய்வுப்படிவத்தை அறிமுகம் செய்தல் மற்றும் ஆய்வுப்படிவங்களை அச்சிடுதல்**

**5.1** சமுர்த்தி முதலீட்டு திறன்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நடுத்தர அளவிலான கடன்தேவைகளை/ திறன்களை மதிப்பீடு செய்வதற்கான படிவம் - இணைப்பு- 01

**5.2** ஆய்வுப்படிவங்கள் வங்கியின் நிதியில் இருந்து அச்சிடப்பட்டு வங்கி முகாமையாளரால் வழங்கப்படல் வேண்டும். செலவினங்களை செய்யும் போது செலவுகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**5.3** சமுர்த்தி வங்கி அல்லது வங்கிச் சங்கத்தில் அச்சிடுவதற்கான வசதிகள் காணப்படுமாயின் அவ்வளங்களை பாவித்து ஆய்வுப்படிவங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 06. ஆய்வு தொடர்பான பயிற்சி வழங்கல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்

**6.1** வங்கியின் அதிகாரப் பிரதேசத்தினுள் நியமிக்கப்பட்டுள்ள சகல ஆய்வுக் குழு அங்கத்தவர்களையும் ஒன்று சேர்த்து ஆய்வின் நோக்கம், தொழில் முயற்சியாளருக்கு தெளிவூட்ட வேண்டிய விதம், தகவல் சேகரிக்கும் விதம், படிவங்களை பூரணப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக தெளிவினை வழங்குதல் வேண்டும்

**6.2** இவ் ஆய்வு வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ள கால அட்டவணைக்கு ஏற்றவிதத்தில் குழப் பயிற்சிக்கு அங்கத்தவர்களை மிக விரைவாக அழைத்து பயிற்சியளித்தல் வேண்டும். இப்பயிற்சிக்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**6.3** இவ் வேலைத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் ஆய்வுக்கு உட்படுத்தப்படவிருக்கின்ற தொழில் முயற்சியாளர்களை பட்டியல்படுத்தும் நடவடிக்கை வங்கி முகாமையாளரின் தலைமையில் பிரிவுக்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர் (குறித்த குழு அங்கத்தவர் ) ஆகியோரின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். குழுவினரை பயிற்றுவிப்பதில் இருந்து பட்டியல்படுத்தல் நடவடிக்கை வரைக்குமான அனைத்து விடயங்களும் வங்கி முகாமையாளரின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**6.4** சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (பிரிவுக்கு பொறுப்பான), கட்டுப்பாட்டு சபை உறுப்பினர் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்/ செயலாளர் ஆகியோரால் பந்தி இலக்கம் 3.2 இன் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட தொழில் முயற்சியாளர்களை சந்தித்து வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் உரிய ஆய்வுப்படிவத்தினை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். களத்துக்கு சென்று தொழில் முயற்சியாளர்களை சந்தித்து இன் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏதும் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படின் தொழில் முயற்சியாளருக்கு அறிவித்து பொது இடம் ஒன்றில் சந்தித்து தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் இடமளிக்கப்படுகின்றது.

**6.5** இத்தகவல்களை பூரணப்படுத்துதல் குறித்த வங்கி வாடிக்கையாளரின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அதனை அவர்களுக்கு தெரியப்படுத்தி அதற்கான கையொப்பத்தையும் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**6.6** மேலும் ஆய்வின் பின்னர் குழு அங்கத்தவர்களை அழைத்து ஆய்வுப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்களின் உண்மைத்தன்மை, பூரணத்துவம் என்பவற்றை பரிசீலணை செய்து குழு உறுப்பினர்களின் ஒப்பத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**6.7** பிரிவுச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பூரணப்படுத்திய ஆய்வுப்படிவங்களை வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**6.8** வங்கி முகாமையாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஆய்வுப்படிவத்தின் பூரணத் தன்மை தொடர்பாக பரிசீலணை செய்து கொள்ளல் வேண்டும். படிவத்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கான ஒரு பதிவேட்டினையும் பாவித்துக்கொள்ளல் வேண்டும்.

## 07 தகவல்களை கணனி மயப்படுத்தலும் பகுப்பாய்வு செய்தலும்

**7.1** ஆய்வுக்குழு ஒப்படைக்கும் ஆய்வுப்படிவங்களை பரிசீலணை செய்து ஒவ்வொரு தொழில் முயற்சியாளரும் பெற்றுக்கொள்கின்ற **"✓"** அடையாளத்தின் மொத்த தொகையினை கணக்கிட்டு அதனை நூற்றுவீதத்தில் கணித்துக்கொள்ளல் வேண்டும். ஆய்வினை முடித்து குழுவினால் ஒப்படைக்கப்படும் ஆய்வுப்படிவங்களை கணனிப்பதிவுக்கு உட்படுத்தல் வேண்டும்.

**7.2** இதன்பிரகாரம் 60 அல்லது அதனைவிட கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள தொழில்முயற்சியாளர்களை மாத்திரம் இணைப்பு-2 க்கு அமைவான விதத்தில் பட்டியல்படுத்தி உரிய திகதிக்கு முன்னர் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**7.3** இத்தகவல்களை வங்கி முகாமையாளர் தனது தகவல் வலையமைப்பாக செயற்படுத்திச் செல்வதுடன் தனது வங்கி வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை கட்டியெழுப்பக்கூடிய விதத்தில் இத்தகவல் வலையமைப்பினை பேணல் வேண்டும்.

**7.4** சமுர்த்தி வங்கிச்சங்கம் தமது அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் வங்கிகளின் தகவல்களைப் பெற்று இணைப்பு-03 படிவத்தில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் இறங்குவரிசை முறையில் பட்டியல்படுத்தி **rbankresearch@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு குறுநிதிப்பிரிவுக்கு அனுப்பி வைப்பதுடன் அதன் பிரதியினை மாவட்ட சமுர்த்திப்பிரிவுக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**7.5** மாவட்ட சமுர்த்திப்பிரிவு பிரதேச செயலக மட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை படிவம் 04 க்கு அமைய பட்டியல்படுத்தி **rbankresearch@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு குறுநிதிப்பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**7.6** இரண்டாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஆய்வு தொடர்பான அறிக்கையினையே மேற்படி ஆலோசனைகளின் பிரகாரம் உரிய பிரிவுகளுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**7.7** கீழ்வரும் பந்தி இலக்கம் 8 இன் தொடர் இலக்கம் 6 இற்குரிய பணிகளை விரைவாக மேற்கொண்டு முடிக்கும் பொருட்டு கணனிப்பதிவுச் செயற்பாடுகளுக்கு வார இறுதி விடுமுறை நாள் ஒன்றில் கடமைபுரிவதற்கு இடமளிக்கப்படுகின்றது. தேவை எனின் கணனி பயிற்சியாளரின் சேவையினையும் பெற்றுக்கொள்ள முடியும். கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு நாட் சம்பளத்தையும் வழங்க முடியும்.

## 08. கால அட்டவணையும் மற்றும் பொறுப்பு வழங்குதலும்

| தொ. இல | விடயம் | கால எல்லை | பொறுப்பாக்கப்படும் உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|
| 1 | கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் குழு அமைத்தல் | 2018.08.03க்கு முன்னர் | பிரதேச செயலாளர் |
| 2 | குழுவினருக்கு அறிவூட்டல் | 2018.08.07க்கு முன்னர் | வங்கி முகாமையாளர் |
| 3 | தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காணல் (1 ஆம் கட்டம்) | 2018.08.07க்கு முன்னர் | வங்கி முகாமையாளர் / சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் |
| 4 | ஆய்வினை மேற்கொள்ளல் | 2018.08.08ல் இருந்து 2018.08.15 வரை | குழு அங்கத்தவர்கள் |
| 5 | ஆய்வுப்படிவங்களை ஒப்படைத்தல் | 2018.08.17க்கு முன்னர் | பிரிவுச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 6 | தகவல்களை கணனி மயப்படுத்தல் மற்றும் அனுப்பி வைத்தல் | 2018.08.21 | வங்கி முகாமையாளர் |
| 7 | பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் அறிக்கை தயாரித்தல் மற்றும் அனுப்பி வைத்தல் | 2018.08.24க்கு முன்னர் | வங்கிச் சங்க முகாமையாளர் (தயாரித்த தகவல்களை மின்னஞ்சல் மூலம் பிரதான காரியாலயத்துக்கும் மாவட்ட பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்தல்) |
| 8 | மாவட்ட அறிக்கையினை வழங்குதல் | 2018.08.29க்கு முன்னர் | மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் |
| 9 | தேசியமட்டத்திலான அறிக்கை தயாரித்தல் | 2018.08.31க்கு முன்னர் | குறுநிதிப்பிரிவு |

.

**09. கண்காணிப்பு மற்றும் நெறிப்படுத்தல்**

**9.1** சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் தமது வங்கிச் சங்க அதிகாரப் பிரதேசத்தினுள் கிராமசேவகர் பிரிவுகளுக்கு உரிய ஆய்வுப் படிவத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், குழு உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தல், ஆய்வு நடவடிக்கை சரியான விதத்தில் இடம்பெறுவதனை பரிசீலித்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை வழங்குதலை துரிதப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**9.2** மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் இச் செயற்பாடுகள் தமது மாவட்டத்தினுள் சரியான விதத்தில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை கண்காணித்து, இதில் ஏற்படும் உருவாகின்ற பிரச்சினைகளை தீர்த்து, தகவல்களை சேகரித்து, தகவல்களை வழங்குகின்ற நடவடிக்கைகளை கண்காணித்து நெறிப்படுத்தல் வேண்டும்.

**9.3** தேசிய மட்டத்தில் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலுக்கமைய குறுநிதிப் பிரிவுக்கு தேசிய மட்டத்தில் வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல், பயிற்சியளித்தல், பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல், ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் விதத்தினை அவதானித்தல், அறிக்கைகளை விரைவாக பெற்றுக்கொள்ளல் மற்றும் முன்வைத்தல் போன்றவை பொறுப்பாக்கப்படுகின்றது.

**10.** இவ்ஆய்வு வேலைத்திட்டம் கிராமசேவகர் பிரிவு மற்றும் வங்கி மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற விதம் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறிக்கப்படும் திணைக்கள உத்தியோகத்தர் குழுவினால் களப்பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் தயார் செய்யப்பட்டுள்ளது.

**11.** இவ்ஆய்வுப் பணிகளை தொடர்ச்சியாக செயற்படுத்துவதன் மூலம் வங்கிகள் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் கீழ்வரும் பலாபலன்களை பெற்றக்கொள்ள முடியும்

I. வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காணல்
II. அவர்களின் நிதித் தேவைப்பாடுகளை உரிய காலத்தில் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலை பெறல்
III. எதிர்கால கடன்களை வழங்குவதற்கு ஏற்றவிதத்தில் வங்கிகளை முன்கூட்டியே தயார்படுத்தல்
IV. வங்கிகளுக்கான எதிர்கால கடன் செயற்பாட்டுத் திட்டமிடலை தயாரிக்க உதவுதல்

**12.** இச் செய்முறையின் மூலம் சமுர்த்தி வங்கிகள் திரட்டுகின்ற தகவல்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் தகவல் வலையமைப்பொன்றினை பேணிச்செல்வதற்கு உரிய உத்தியோகத்தர்களின் முகாமைத்துவம் அவதானம் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதே போல் இம்முறையினை மேலும் விரிவுபடுத்துவதற்கு தேவையான கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை நேரடியாக குறுநிதிப்பிரிவுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

**13.** இவ்வேலைத்திட்டத்தினை விரைவாகவும், சரியானமுறையிலும் , பூரண ஈடுபாட்டுடனும் மேற்கொள்வதற்கு தங்களது அவதானத்தையும் மற்றும் ஒத்துழைப்பையும் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.



ஜெ.தடலகே
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | செயலாளர் சமுக வலுவூட்டல் அமைச்சு | - | தகவலுக்காக |
| 2. | சகல மாவட்ட செயலாளர்களுக்கும் | - | தகவலுக்காக |
| 3. | சகல பிரதேச செயலாளர்களுக்கும் | - | தகவலுக்காக |
| 4. | சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் | - | தகவலுக்காகவும்,உ.ந.பொ |
| 5. | பிரதம உள்ளக கணக்காய்வாளர்- சமு.அபி.திணைக்களம் | - | தகவலுக்காகவும் ,உ.ந.பொ |
| 6. | அனைத்து பணிப்பாளர்களுக்கும் -சமு.அபி.திணைக்களம் | - | தகவலுக்காகவும், உ.ந.பொ |
| 7. | சகல கட்டுப்பாட்டு சபை தலைவர்களுக்கும் | - | தகவலக்காக |

Translated By- I. Aliyar